**செ. கு. எண்**:382 **நாள்**:28.10.12

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 28.10.2012

தமிழகத்தில் பரவலாகப் பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையின் காரணமாக 23.10.2012 அன்று ராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், வாலிநோக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சேக் சதக்கதுல்லா என்பவரின் மகன் செல்வன் நிப்ரஸ்கான் சுவர் இடிந்து விழுந்ததால் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

24.10.2012 அன்று கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், அறந்தாங்கி கிராமத்தைச் சேர்ந்த திரு. ராமசாமி என்பவரின் மகன் திரு. கணேசன்;

விருதுநகர் மாவட்டம், காரியப்பட்டி வட்டம், பாம்பாட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. பெருமாள்ராஜ் என்பவரின் மனைவி திருமதி தீபலெட்சுமி ஆகியோர் மின்சாரம் தாக்கியதால் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், புளியம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. குஞ்சண்ணன் என்பவரின் மனைவி திருமதி அய்யம்மாள் சுவர் இடிந்து விழுந்ததால் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

25.10.2012 அன்று கடலூர் நகரம், ஒட்டேரி காலனியைச் சேர்ந்த திரு. வீரப்பன் என்பவரின் மகன் திரு. சேகர் ஆற்றினை கடக்கும் போது தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

தமிழகத்தில் பெய்து வரும் கன மழையின் காரணமாக பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த இந்த ஐந்து நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்கள் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் உதவித் தொகையை உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:-**

**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**